بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/06/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

இன்றைய நாட்களில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு சென்று கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கிய போது, அன்னார் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும் தனித்தனியாக வரவழைத்து அவர்கள் இருவரிடமும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி வினவினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைச் சிறந்தவர்களாகக் கூறி, அவர்களின் இயல்பின் கடினத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'என்னிடம் மென்மையைக் காண்பதால் தான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் கடினம் உள்ளது. தலைமைப் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்படும் போது, அவர்கள் தம்மிடமுள்ள பல விஷயங்களை விட்டுவிடுவார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி நேர்மறையான கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். மேலும், 'ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அகம் அவர்களுடைய புறத்தைவிடச் சிறந்தது' என்று கூறினார்கள்.

இந்த நாட்களிலேயே ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பின் கடினத்தின் காரணமாக தமது முன்னெச்சரிக்கையை வெளிப்படுத்தியவாறு, 'இறைவன் தங்களிடம் குடிமக்கள் தொடர்பாகக் கேட்பான்' என்று பணிவுடன் கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், "எனது இறைவன் என்னிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பற்றிக் கேட்கும் போது, 'நான் உன்னுடைய அடியார்களில் சிறந்தவரை உன்னுடைய அடியார்களுக்கு கலீஃபாவாக்கினேன்' என்று பதிலளிப்பேன்" எனக் கூறினார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அழைத்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பேரில் உயில் எழுத வைத்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுதிக் கொண்டிருந்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மயக்கம் வந்துவிட்டது. இதற்கிடையில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பெயரை எழுதிவிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு நினைவு வந்ததும் அன்னார், 'நீர் என்ன எழுதினீர்?' எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், 'நான்

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பெயரை எழுதியுள்ளேன்' எனக் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'நான் நினைத்ததைத் தான் நீர் எழுதியுள்ளீர்' என்று கூறினார்கள்.

உயில் எழுதப்பட்டதும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதை மக்களுக்கு வாசித்துக் காட்டுமாறு கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களை ஒன்று கூட்டினார்கள். உயில் வாசிக்கப்பட்டது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'நான் உங்களுக்கு கலீஃபாவாக நியமித்தவர் மீது நீங்கள் திருப்தி கொள்கிறீர்களா? நான் எந்த உறவினரையும் உங்களுக்கு கலீஃபாவாக நியமிக்கவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இது தொடர்பாக ஆழ்ந்து சிந்திப்பதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. அவருக்கு செவிமடுங்கள்; கட்டுப்படுங்கள்' என்று கூறினார்கள். அதற்கு மக்கள் 'நாங்கள் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம்' என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்து அவர்களிடம் இறையச்சத்தை மேற்கொள்ளுமாறும் மக்களுடன் மென்மையாக நடந்து கொள்ளுமாறும் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனதற்குப் பிறகு ஆற்றிய முதல் சொற்பொழிவு தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. அன்னார் கூறினார்கள்:

அல்லாஹ் உங்களை என் மூலமாகவும், என்னை உங்கள் மூலமாகவும் சோதித்துள்ளான். உங்களுடைய எந்த விவகாரம் என் முன் வைக்கப்பட்டாலும் சரி! என்னைத்தவிர வேறுயாரும் அதைப் பார்க்க மாட்டார்கள். என்னை விட்டுத் தொலைவில் இருக்கும் விவகாரத்துக்கு நான் வலுவான மற்றும் நம்பகமான மக்களை நியமிப்பேன். அரபுநாட்டு மக்களின் உதாரணம், கடிவாளம் இடப்பட்ட ஒட்டகத்தைப் போன்றது. அது தன்னை மேய்ப்பவருக்குப் பின்னால் செல்கிறது. ஆக அதை மேய்ப்பவர் எவ்வாறு மேய்க்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். என்னைப் பொருத்தவரை நான் நிச்சயமாக அவர்களை நேர்வழியில் நடத்துவேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்வானதற்கு மூன்றாவது நாள் ஒரு விளக்கமான சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதிய பிறகு கூறினார்கள்:

மக்கள் என்னுடைய கோபமான இயல்பால் அஞ்சுகிறார்கள் என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்திலும் நான் இவர்கள் இருவரின் கையிலும் உறுவிய வாளாக இருந்தேன். அவர்கள் நாடினால் என்னை உரையிலிட்டுக் கொள்வார்கள். நாடினால் என்னை விட்டுவிடுவார்கள். நான் வெட்டி வீழ்த்துவேன்.

மக்களே! நான் உங்களது விவகாரங்களுக்கு ஆட்சியாளன் ஆகிவிட்டேன். இப்போது, அந்தக் கோபம் பலவீனப்படுத்தப்பட்டு விட்டது. இப்போது அது முஸ்லிம்கள்மீது அநீதியிழைப்பவர்கள் மீதும், கையோங்குபவர்கள் மீதும் வெளிப்படும். நல்லியல்புடைய, நேர்மையான மற்றும் சிறப்புடைய மக்களுடன் நான் அவர்கள் ஒருவர் மற்றவர் மீது காட்டுவதை விடவும் அதிகமாக மென்மை காட்டுபவனாகத் திகழ்வேன்.

மக்களே! நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையாவது, நான் போர்ச் செல்வங்களிலிருந்தும் உங்களுக்குச் செலவு செய்ய வேண்டிய செல்வங்களிலிருந்தும் எதையும் உங்களிடமிருந்து மறைத்து வைக்கக் கூடாது. உங்களுக்கான உதவித் தொகைகளையும் தினக்கூலிகளையும் உங்களுக்குக் கொடுத்து வரவேண்டும். நான் உங்களை அழிவில் கிடத்தக்கூடாது. நீங்கள் போர்ப்படையில் கலந்து கொண்டு வீட்டில் இல்லாதபோது, உங்கள் மனைவி மக்களுக்குத் தந்தையாக இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக எந்த அளவு தியாகங்களை செய்துள்ளார்கள் என்றால், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனைகள் செய்யும் அந்த ஐரோப்பிய எழுத்தாளர்கள் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'எந்த அளவு கடின உழைப்போடும் தியாகத்தோடும் இம்மக்கள் பணியாற்றினார்களோ, அதற்கு உதாரணம் உலகின் எந்த ஆட்சியாளரிலும் தென்படுவதில்லை' என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஊழியராக இருந்ததன் காரணமாகவும் இறைவனுக்கு அஞ்சியதன் காரணமாகவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் நீதியான இயல்பு மற்றும் முன்னோக்குப் பார்வை இருந்தது என்பதை நிரூபித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

எந்நேரமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த அந்த மனிதர், மரணிக்கும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடியில் தமக்கு இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதேனும் ஒரு செயல் மூலம், அன்னார் இறைவனின் தன்னிறைவைப் பெறுவதற்காக செயலாற்றவில்லை என்பது வெளிப்பட்டிருந்தால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மனிதர் அந்த அந்தஸ்த்தை அடைந்த பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடிகளில் இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஒருபோதாவது ஆசை கொண்டிருப்பார்களா?

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது இருந்த பற்றுறுதியின் வெளிப்பாடு தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஈரான் வெற்றி பெறப்பட்ட போது, அங்கிருந்து மென்மையாக மாவு அரைக்கும் ஆட்டுரல்கள் கொண்டு வரப்பட்டன. அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் அரைக்கப்பட்ட மென்மையான மாவை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதிருந்த அன்பு, நேசத்தின் காரணமாக அந்த மாவால் தயாரிக்கப்பட்ட சப்பாத்தியிலிருந்து ஒரு கவளத்தை வாயில் போட்டவுடனேயே அன்னார் கண்ணீர் மல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: எவர்கள் காரணமாக நமக்கு இந்த அருட்கொடைகள் கிடைத்தனவோ அவர்களோ இந்த அருட்கொடைகளை இழந்தவர்களாக சென்றுவிட்டார்கள். ஆனால், நாம் அந்த அருட்கொடைகளைப் பயன்படுத்துகிறோம்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இமாம் ஹஸன் மற்றும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவருக்கும் மிகவும் கண்ணியமளித்து வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்காக உதவித் தொகைகளை நிர்ணயித்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய உறவினர்களிலிருந்து துவங்கினார்கள். அன்னார் முதலில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கும்; பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் பங்கை நிர்ணயித்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இனிவருங்காலங்களில் தொடரும் என்று கூறிய பிறகு, எந்த மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைத்து, ஜனாஸா காயிப் தொழவைப்பதற்கான அறிவிப்பை செய்தார்களோ அவர்களில் முதலாவது குறிப்பு, நாஸிர் பைத்துல் மால் ஆக இருந்த*

*குஜராத்தைச் சேர்ந்த தர்வேஷ் மர்ஹூம் ஃபய்ஸ் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியாரான ஸுஹைலா மஹ்பூப் சாஹிபா அவர்களுடையதாக இருந்தது. இவர்கள் 90 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள்.*

**அல்லாஹ்வின் அருளால் மூஸியாவாக இருந்தார்கள். இவர்கள் பீகாரின் ஒரு கல்வி கற்ற குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். இவர்களின் தந்தை அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால், இவர்களின் தாயார் தமது தந்தையார் பைஅத் செய்த பிறகு தாமே நூல்களை வாசித்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். மர்ஹூமா வாழ்வை அர்ப்பணித்தார்கள்.**

**அப்பொழுது நாஸிர் கித்மத்தே தர்வேஷான் ஆக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தலுக்கான கடிதத்திற்கு இவர்களுக்கு இவ்வாறு பதில் கடிதம் எழுதினார்கள்: எனக்கு நீங்கள் வாழ்வை அர்ப்பணித்தது பற்றித் தெரிய வந்தது. நீங்கள் முன் எடுத்து வைத்துள்ள இந்த அடி மிகவும் மதிக்கத்தக்கதாகும். வக்ஃபின் கீழ் உங்களுடைய தலையாய கடமையாவது, மார்க்க அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய செயல்களை இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்துக்கு ஏற்ப ஆக்குங்கள். இவ்வாறு சிறந்த முன்மாதிரி ஏற்படும்.**

**1964 இல் மர்ஹூமா அவர்களுடைய திருமணம் தர்வேஷ் சவுத்ரீ அப்துல்லாஹ் சாஹிப் அவர்களுடன் நடைபெற்றது. அவர்கள் மூலம் ஒரு மகள் பிறந்தார். ஆனால், சில காலங்களுக்குப் பிறகு பிரிவு ஏற்பட்டு விட்டது. பிறகு இவர்களுக்கு குஜராத்தைச் சேர்ந்த தர்வேஷ் சவுத்ரீ ஃபய்ஸ் அஹ்மத் சாஹிப் அவர்களுடன் இரண்டாவது திருமணம் நடைபெற்றது. அவர்கள் மூலமாக ஒரு மகன் பிறந்தார். அவர் சிறுவயதிலேயே வஃபாத் ஆகிவிட்டார். ஆக, மர்ஹூமா அவர்களுக்குப் பணி ஓய்வு பெறும் வரை, கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் காதியானிலுள்ள நுஸ்ரத் கேல்ஸ் ஹைஸ்கூலில் தலைமை ஆசிரியையாகத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது.**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்தியாவின் ஒடீஷா மாநிலத்தின் கேரங் ஜமாஅத்தைச் சேர்ந்த ஷேக் இஸ்ரார் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன், நஸாமத் தஃமீராத் காதியானின் சூப்பர்வைஸர் மதிப்பிற்குரிய ஷேக் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.இவர்கள் கடந்த நாட்களில் கொரோனா காரணமாக 33 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள்.*

**மர்ஹூம் பிறப்பால் அஹ்மதியாவார்கள். இவர்களின் குடும்பம் பழைய அஹ்மதி குடும்பங்களில் ஒன்றாகும். மிகவும் நல்லொழுக்கமுள்ள தொழுகையாளியாக, மார்க்கத் தொண்டுக்காக ஆயத்தமாக இருக்கக்கூடிய, இயக்கத்தின் தொண்டராக இருந்தார்கள். சிறுவயதிலிருந்தே பள்ளியோடு சிறப்பான தொடர்பு இருந்தது. மர்ஹூம் எட்டு ஆண்டுகளாக நஸாமத் தஃமீராத் காதியானில் மிகவும் நல்லமுறையில் சூப்பர்வைஸராகத் தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் பொறுமையாக ஆழ்ந்து சிந்தித்துப் பணியாற்றக்கூடியவராக இருந்தார்கள். தமது பணிகளை மிகவும் ஆழமாக சென்று பார்த்து வந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், துணைவியார் மட்டுமின்றி பெற்றோரும் இரண்டு சகோதரரும் ஒரு சகோதரியும் இருக்கிறார்கள்.**

*இவர்கள் மட்டுமின்றி, இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய ராஜா குர்ஷீத் அஹ்மத் முனீர் சாஹிப், வரவேற்புத் துறையின் முஆவின் நாஸிர் வஸிய்யத் ஆக இருந்த இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய ஸமீர் அஹ்மத் நதீம் சாஹிப், தன்ஸானியாவின் தேசிய துணை அமீர் மதிப்பிற்குரிய ஈஸா மவ்க்கீ தல்மியா சாஹிப், ஆஸ்திரேலியாவின் சிட்னி மாகாணத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஸைஃப் அலீ சாஹிப் மற்றும் யூ.கேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மஸ்ஊத் அஹ்மத் ஹயாத் சாஹிப் ஆகியோரைப் பற்றி எடுத்துரைத்த பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர் படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**